# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## 2017 NRB மாநாட்டிலும் கண்காட்சியிலும் GCN பங்குபெற்றது

### அநேக ஒளிபரப்பாளர்களையும், GCN நேயர்களையும் சந்தித்து ஒளிபரப்பு ஊழியத்தின் தாக்கத்தை உறுதிசெய்தனர்




அமெரிக்காவின் ப்ளோரிடா மாநிலத்தின் ஓரலண்டோவில் உள்ள மேர்ரியாட் ஓரலண்டோ சர்வதே மையத்தில் பிப்ரவரி 27 முதல் மார்ச் 2 வரை நடைபெற்ற 2017 NRB சர்வதேச கிறிஸ்தவ ஊடக மாநாடு மற்றும் கண்காட்சியில் GCN பங்குப்பெற்றது.

NRB (National Religious Broadcasters) கிறிஸ்தவ ஊடகவியலார்களின் உரிமைகளை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டதாகும். அமெரிக்காவை தலைமையாக கொண்டுள்ள இந்த அமைப்போடு ஏறக்குறைய 1,400 அமைப்புகள் சேர்ந்து தொழில் நுட்பங்களையும் நிகழ்ச்சிகளையும் பரிமாறிக் கொள்கின்றன. 2017ல், பெந்தெகொஸ்தே மறு மலர்ச்சியின் 500வது ஆண்டுவிழாவில் 200க்கும் மேற்பட்ட குழுவினர் வந்து தங்களது ஊடக ஊழியத்தை குறித்த தரிசனத்தை பகிர்ந்து கொண்டனர்.

பிப்ரவரி 27 அன்று, GCN பெரிய கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்களின் ஐக்கியத்தில் பங்குபெற்றது. அவர்கள் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களை அறிமுகப்படுத்தினர், அவருடைய வல்லமை மற்றும் சபையின் ஒளிபரப்பு ஊழியத்தையும் அறிவித்தனர். அதன்பிறகு நடந்த ஆரம்ப நிகழ்ச்சியில் NRB மாநாடு துவக்கி வைக்கப் பட்டது.

பிப்ரவரி 28 அன்று, GCN பூத்திற்கு நியூயார்க் அலைவரிசை 17, டிபிஎன் ரஷியா, இம்பாக்ட் டிவி (அமெரிக்காவிலுள்ள ஒரே ரஷ்ய அலைவரிசை) மற்றும் ரைட்கேஸ்ட் (இணையதள ஒளிரப்பு) போன்ற அநேக ஒளிபரப்பாளர்களின் தலைவர்கள் உட்பட பல்வேறு ஜனங்கள் வந்து பார்த்தனர். அவர்கள் தகவல்களை பரிமாறிக் கொள்ளுவதில் உள்ள பிரத்யேக வழிமுறைகளை குறித்தும், GCNனின் உலகளாகவிய ஊழியத்தோடு நெருங்கிய கூட்டணியாக இருப்பதைக் குறித்தும் ஆலோசித்தனர்.

NRBயின் தலைவர் Dr. ஜெரி ஜான்சன் மற்றும் NRBயின் தலைவர்கள் GCN பூத்திற்கு வந்து, "நமக்கு இந்நாட்களில் தேவனுடைய வார்த்தை தேவைப்படுகிறது. அதை அறிவிக்கிற GCN நம் மத்தியில் இருப்பது நமக்கு மிகப் பெரிதான மகிழ்ச்சியாகும்" என்று சொல்லி ஊக்குவித்தனர். முன்னாள் தலைவரான Dr. ப்ராங் ரைட் அவர்களும் வந்து வரவேற்றார். அமெரிக்காவில் உள்ள ப்பிரிட்சுவல் டிப்ளமாசியின் தலைவர் Dr. மிர்காய்ல் மொர்குலிஸ் மற்றும் அசிஸ்ட் நியூஸ் சர்விஸின் தலைவர் திரு. டான் வுட்டிங் அவர்களும் அறிவர். ஜேராக் லீ மற்றும் மான்மின் அங்கத்தினர்கள்மீதான அன்பை வெளிப்படுத்தினர்.

அநேக GCN நேயர்களும் வந்து தங்களது அனுபவத்தை சாட்சியாகச் சொன்னார்கள். அது ஒளிபரப்பு ஊழியத்தின் தாக்கத்தையும் ஆச்சரியமான அதன் செல்வாக்கையும் காண்பித்தது. ப்ளோரிடா மாகாணத்தில் வசிக்கும் கண்காணியாள் சூன்ஜா ச்சோ, "அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்களை நான் கேட்டிராவிட்டால், பரலோகத்திற்கு எதிரான பாதையில் இருக்கிறேன் என்பதை நான் உணர்ந்திருக்கமாட்டேன். வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்தை எனக்குப் போதிக்கின்ற அறிவர். லீ அவர்களுக்கு என் நன்றிகளை செலுத்துகிறேன்" என்று கண்ணீரோடு சொன்னார்கள். என்லஸ் தொலைக்காட்சி (லத்தீன் அமெரிக்காவில் தலைசிறந்த ஒளிபரப்பு நிறுவனம்) நேயரான சகோதரி கொசியோலா நொமா, "ஞாயிறு காலையில் அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களினால் நான் மிகுதியான கிருபைகளை பெற்றுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட அருமையான நிகழ்ச்சிகளுக்காக நன்றிசெலுத்துகிறேன்" என்று சொன்னார். க்ளோரி ஸ்டார் தொலைக் காட்சியின் பணியாளர் ஒருவர் அமெரிக்காவில் 2,50,000க்கும் மேற்பட்ட மக்கள் GCN–னை பார்ப்பதாகவும், வருடத்திற்கு நேயர்களின் எண்ணிக்கை 25 ஆயிரமாக உயர்வதாகவும் சொன்னார். அவர் மேலும், "பிரசங்கங்கள், துதிஆராதனைகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் சிறப்பானவை" என்று சொன்னார்.

மார்ச் 1 அன்று, ஊடக தலைவர்கள் விருந்திற்கும், எருசலேம் ஒன்றாய் இணைந்த 50வது ஆண்டுவிழா கொண்டாட்டத்திற்கும் GCN அழைக்கப்பட்டிருந்தது. அதில் அவர்கள் ஏற்கனவே சந்தித்த அநேக ஒளிபரப்பாளர்களை சந்தித்து, நட்பை புதுப்பித்துக் கொண்டார்கள். மதிய வேளையில் GCNனின் இயக்குனர் மூப்பர் ஜானி ஜே. கிம் வெளிநாட்டு படைமுயற்சி கூட்டங்களில் அறிவர். ஜேராக் லீ அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட இடைவிடாத வல்லமையான கிரியைகளையும், சகல தேசங்களின் சகல மக்களையும் விழித்தெழும்பச் செய்கிற GCN ஊழியத்தையும் அறிவித்தார்.

RNBயின் துணைத் தலைவர் ஆண்ட்ரே பிட்நியுக் மற்றும் போதகர் லீ ஸ்ட்ரோபெல் அவர்களும் பூத்திற்கு வந்து நல்லதொரு ஐக்கியத்தை GCNனோடு ஏற்படுத்திக்கொண்டனர். அவர்களின் வாழ்க்கை 'கிறிஸ்துவின் வழக்கு' என்ற திரைப்படமாக தயாரிக்கப்பட்டது. மார்ச் 2 அன்று, பெலோ குழும வெளியீட்டாளரின் தலைவரையும், NRB தொலைக்காட்சியின் தலைவர் டிராய் மில்லரையும் சந்தித்தனர்.

2005 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது முதல், பொதுநல, செயற்கைக்கோள் மற்றும் கேபிள் TV ஒளிபரப்பாளர்கள் என பல்வேறு தலைசிறந்த தொலைக்காட்சி நிறுவனங்களோடு GCN ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் ஒளிபரப்பு நிலையமானது தனித்துவமான நிகழ்ச்சிகளை அறிவர். லீ அவர்களின் ஜீவனுள்ள வார்த்தை மற்றும் வல்லமையான கிரியைகளின் அடிப்படையில் 170க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரப்பி கொண்டு வருகிறது.

### "அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கமானது புரிந்துகொள்வதற்கு தெளிவாக உள்ளது"

தலைவர் யூரி செர்நெஸ்கி, இம்பெக்ட் TV (ரஷியன்), அமெரிக்கா



அநேக ரஷ்ய GCN நேயர்கள் அருமையான விமர்சனங்களையும், தங்களது கருத்துகளையும் அனுப்புகின்றனர். ஆவர்கள் அறிவர். ஜேராக் லீ அவர்களின் போதனைகளை மதிக்கின்றனர். அவருடைய போதனையின் மூலமாக அவர்கள் தேவனையும், பரிசுத்த வேதாகமத்தையும் குறித்து மிகத் தெளிவாக புரிந்துகொள்வதாக சொல்கின்றனர்.

அறிவர். ஜேராக் லீ தேவனிடத்திலிருந்து வெளிப்பாடுகளை பெற்று, அதைக் குறித்து செய்திகளை பிரசங்கிக்கின்றார். அவைகள் மிகப் பெரிய ஆசீர்வாதங்களின் செய்திகளாகும். நேயர்களில் அநேகர் பரலோகம் நரகத்தை குறித்து அறிந்துகொண்டு, செய்திகளின் வாயிலாக பரிசுத்த வேதாகமம் எவ்வாறு சத்தியத்தைப் போதிக்கிறது என்பதை உணர்ந்துகொள்கின்றனர். அவருடைய ஊழியமானது தலைசிறந்த நிபுணத்துவம், ஒழுங்கு, கொள்கைகள், கட்டமைப்பு மற்றும் ஒழுங்கின் ஆற்றல் போன்ற சிறப்பம்சங்களை உடையது. GCN உடனான எங்கள் ஒத்துழைப்பு தேவனுடைய மகிமைக்காக வலுப்பெறும் என்று நான் நம்புகிறேன்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# உன் இருதயத்தின் வேண்டுதலை பெறுவதற்கு

"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" (சங்கீதம் 37:4)

ஒவ்வொரு நபரும் அவரவர் தங்கள் தங்கள் இருதயத்தின் வேண்டுதல்கள் உள்ளவர்களாய் இருப்பார்கள். அன்பும் கிருபையும் நிறைந்துள்ள தேவனுக்கு தம்முடைய பிள்ளைகளின் வேண்டுதல்களை நிறைவேற்றுவது என்பது கடினமல்ல. நாம் அவருடைய இருதயத்தை அறிந்து அவரைப் பிரியப்படுத்தினால், அவர் நம்முடைய இருதயத்தின் வேண்டுதல்களை நமக்கு அருள் செய்வார்.

### 1. தேவனைப் பிரியப்படுத்துகிற ஆவிக்குரிய விசுவாசம் உங்களுக்கு இருக்க வேண்டும்

"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு" என்பது மனித உணர்வில் களிகூருதல் என்று அர்த்தமில்லை. ஆனால் அதன் அர்த்தம் தேவனளித்த மகிழ்ச்சியான ஆவிக்குரிய மகிழ்ச்சியை அனுபவித்தலாகும்.

ரோமர் 15:13 சொல்கிறது, "பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக." நாம் தேவனை பிரியப்படுத்தினால், அவர் பதிலாக நமக்கு மகிழ்ச்சியை தருவார். அதாவது பரத்திலிருந்து ஆவிக்குரிய மகிழ்ச்சி நம் மேலே இறங்கிவரும்.

அப்படியானால், தேவன் எதிலே பிரியப்படுகிறார்? வேதாகமத்தில், தேவன் அவருக்கு பயபக்தியாய் இருந்து நீதிமான்களாய் மாறியவர்கள்மீது மனமகிழ்ச்சி கொண்டார். அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியங்கொள்ளுகிறார். அவர் சகல நற்கிரியைகளிலும், பிறரோடு பகிர்வதிலும், இருதயத்திலிருந்து செலுத்தும் காணிக்கைகளிலும் நீதியான பலிகளிலும் சர்வாங்க "தகனபலிகளிலும்" பிரியங்கொள்கிறார். சுவிசேஷத்தைப் பரப்புவதிலும் தேவனை துதிப்பதிலும் அவர் பிரியங்கொள்கிறார். தேவனை அதிகமாய் பிரியப்படுத்துவது எதுவென்றால் ஆவிக்குரிய விசுவாசம் தான்.

எபிரெயர் 11:6, "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" என்று குறிப்பிடுகிறது. நம்முடைய துதி, ஜெபம், ஆராதனை, காணிக்கைகள் மற்றும் நற்கிரியைகளை நாம் ஆவிக்குரிய விசுவாசத்தோடு ஏறெடுக்கும்போது மட்டுமே தேவனை பிரியப்படுத்த முடியும்.

தேவனைப் பிரியப்படுத்துகிற விசுவாசம் நமக்கிருந்தால், நாம் எதைக் கேட்டாலும் அதைப் பெற்றுக்கொள்வோம் (மத்தேயு 17:27; மாற்கு 9:23). எலியா ஜெபத்தினால் மூன்று வருடத்திற்கு பிற்பாடு மழைபெய்யச் செய்தார், தானியேல் சிங்கக் கெபியிலிருந்து பாதுகாக்கப்பட்டார். செங்கடல் பிளந்தது, சூரியனும் சந்திரனும் நின்றது. காட்டு மிருகங்கள் தோற்கடிக்கப்பட்டன. வியாதிகளும் பெலவீனங்களும் சுகப்படுத்தப்பட்டன. மரித்தோரும் உயிரோடெழுந்தனர்.

பின் ஜனங்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்தும் பதிலைப் பெறாமல் இருப்பதற்கு காரணம் என்ன? இதன் காரணம் அவர்களது விசுவாசம் மாம்சீக விசுவாசமாக, அதாவது அறிவு சார்ந்த விசுவாசமாக இருக்கிறது. தேவனைப் பிரியப்படுத்துகிற ஆவிக்குரிய விசுவாசம் மட்டுமே உண்மையான விசுவாசமாய் இருக்கிறது. விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம், தேவன் அவனுடைய ஒரே மகனான ஈசாக்கை தகனபலியாக செலுத்தச் சொன்னபோது அவன் தேவன் மரித்தோரையும் உயிர்ப்பிக்க வல்லவராய் இருக்கிறார் என்பதை விசுவாசித்ததால் அவருக்கு கீழ்ப்படிந்தான்.

### 2. ஆவிக்குரிய விசுவாசத்தோடு நீங்கள் எதைக் கேட்டாலும் அதைப் பெறுவீர்கள்

எபிரெயர் 10:22ல் வாசிக்கலாம், "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்."

ஆண்டவருடைய இரத்தத்தினால் பாவங்கள் மன்னிக்கப்பட்ட பிறகு, பரிசுத்த ஆவி நமக்கு வெகுமதியாக அளிக்கப்படுகிறார். பரிசுத்த ஆவியின் உதவியினால், நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது நம்முடைய பாவங்களையும் தீமைகளையும் நாம் கண்டறிய முடியும். கோபம், பகைமை, பேராசை, விபசார சிந்தை, நியாயந்தீர்த்தல், ஆக்கினைத்தீர்த்தல், வஞ்சக இருதயங்கள் எல்லாம் கண்டறியப்படுகிறது. நாம் எத்தனைப் பொல்லாதவர்கள் என்பதை அறிந்துணர உணர, நாம் அவைகளை களைந்துப் போடுவதற்கும் சத்தியத்தால் மாறுவதற்கும் ஊக்கமாக ஜெபிப்போம்.

நம் இருதயம் சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட இருதயமாக எந்தளவு சுத்திகரிக்கப்படுகிறதோ, அந்தளவு தீமையில்லாத உண்மையுள்ள இருதயத்தையும் தேவனளித்த விசுவாசத்தின் பூரண நிச்சயத்திலும் மாற முடியும். அப்பேர்பட்ட ஆவிக்குரிய விசுவாசத்தை அடையும்போது, தேவன் களிகூர்ந்து, நம்மை நேசித்து நாம் எதைக் கேட்டாலும் தருவார். அவர் நமக்கு தேவையானவற்றை நமக்கு எப்போதும் தேவை என்பதை அறிந்து முன்னமே ஆயத்தமும் செய்வார்.

நான் ஏழு ஆண்டுகளாக பல வியாதிகளிலிருந்து கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தேன். ஆயினும் நான் தேவனால் சுகமானேன், அவருடைய கிருபைக்கு கைமாறு செலுத்தவும் அவரைப் பிரியப்படுத்தும்படிக்கு வழிகளை நோக்கி என் வாழ்வு அனைத்தையும் கொடுத்தேன். எனது இருதயம் தேவனைப் பிரியப்படுத்துகிற அவர் மகிமையை வெளிப்படுத்திய போது மட்டுமே மகிழ்ச்சியால் நிறைந்தது. எல்லா வகையான தீமைகளையும் களைந்துப்போட வேண்டும் என தேவன் நமக்குச் சொன்னதால், அவைகளை களைந்துப்போடும்படியாக நான் பாவத்திற்கு விரோதமாக இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக போராடினேன். தேவன் நன்மை, நீதி மற்றும் ஒளியில் களிகூர்ந்தபடியால், நான் என்னுடைய இருதயத்தை சத்தியத்தால் மட்டும் நிரப்பினேன். தேவன் ஆத்துமாக்களை இரட்சிப்பதில் பிரியங்கொள்வதால், இன்னும் ஒரு ஆத்துமாவை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தவும், கால காலங்களுக்கு மக்களுக்கு சுவிசேஷம் சொல்லவும் நான் உபவாசித்து ஜெபிப்பதை நிறுத்தாதிருந்தேன்.

நான் விசுவாசத்தால் மட்டுமே வாழ்ந்தேன். தேவன் எனக்கு ஒரு குறைவில்லாமல் இருக்கும்படிக்கு எனது ஜெபங்கள் ஒவ்வொன்றிற்கும் பதிலளித்தார். ஒரு ஆசையை நான் மனதில் நினைத்தவுடன் அதற்கு அவர் சீக்கிரமாக பதிலளித்தார். மேலும், நான் கேட்டவைகளுக்கு மிகச் சரியான நேரத்தில் எனக்கு கொடுக்கும்படிக்கு முன்னமே ஆயத்தம் செய்தார். காரணம் அவை எனக்கு தேவை என அவர் முன்னறிந்திருந்தார். எனது ஒரே ஜெபத்தலைப்பு தேவனை மாபெரிதாய் மகிமைப்படுத்த வேண்டும், இயேசு ஒருவர் மட்டுமே நம்முடைய இரட்சகர் என்றும், வேதாகமம் உண்மை என்றும் முழு உலகத்திற்கும் பரப்ப வேண்டும் என்பதே.

தேவன் என் ஜெபத்திற்கு பதிலளித்து உலகில் இரட்சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி எனக்களித்த வாக்குத்தத்தங்கள் யாவையும் நிறைவேற்றினார். என் வாழ்வில் ஆபத்தான நிலையில் நான் இருந்ததுபோதுகூட தேவனுக்கு எது பிரியம் என்பதை அறிந்ததால் என்னால் விசுவாசத்தின்படி செயல்பட முடிந்தது. அப்படி செய்தபோது தேவன் என்னைப் பாதுகாப்பார் என்பதை விசுவாசித்தேன். தேவன் அவரது வல்லமையை மகிழ்ச்சியின் நிரூபணமாக எனக்கு வெகுமதியாக தந்தார்.

### 3. விசுவாசத்தால் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்தும்போது நீங்கள் அபரிதமான கனிகளை விளைவிக்க முடியும்.

மோசேயின் மூலமாக தேவனுடைய கிரியையை கீழே கொண்டு வந்த விசுவாச வகையை யோசுவா கண்டான். அவன் கீழ்ப்படியாத பொல்லாத ஜனங்களுக்காக மோசேயின் மன்னிப்பையும் அன்பையும் தேவனுடைய ராஜ்யத்திற்காக கண்ணீரோடு வேண்டியதையும் தேவனுடைய இருதயத்தை அசைத்த ஜெபத்தையும் கண்டான். யோசுவா யுத்தத்தில் மோசேயின் தைரியத்தையும், பாவத்திற்கும் தீமைக்கும் விரோதமான நீதியையும் கண்டான். அதேநேரத்தில், அவன் தேவனுடைய இருதயத்தை புரிந்துக்கொண்டான். தேவனுடைய இருதயத்தை அசைக்கும் வழியைக் கற்றுக் கொண்டான். மோசேயினிடத்திலிருந்து அவன் விசுவாசத்தை கற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள, அவன் இஸ்ரவேலர்களின் இரண்டாம் தலைமுறையினரை வழிநடத்தி கானானை பிடித்து அதற்குள்ளாக நுழைந்தான்.

நீங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியை வெகுமதியாக பெற்றுக் கொண்டால், நீங்களும்கூட வேதாகம நிகழ்வுகளின் மூலமாக பிற அங்கத்தினர்களது சாட்சிகளின் மூலமாக தேவனுடைய கிரியைகளை எப்படி கொண்டு வருவது, தேவனுடைய இருதயத்தை எப்படி அசைப்பது, எப்படி அவர் பெலனைப் பெற்றுக்கொள்வது என்பதைக் கற்றுக்கொள்ளலாம். அதனால், உங்கள் பிரச்சனைகள் பார்ப்பதற்கு எவ்வளவு கடினமாக தோன்றினாலும் பரிசுத்த ஆவியின் கிரியையில் விசுவாசத்துடன் மட்டுமே அவரை பிரியப்படுத்துவதால் தேவனுடைய கிரியைகளை அனுபவிக்க முடியும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் மன விருப்பங்களை பெறுவதற்கு குறுக்கு வழி நீங்கள் கற்றுக்கொண்ட வழிமுறைகளுக்கு தேவனைப் பிரியப்படுத்தும் வகையில் கீழ்ப்படிவதே. நீங்கள் உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் பெற்று எல்லாக் காரியத்திலும் தேவனைப் பிரியப்படுத்தும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]

# ஆவிக்குரிய யுத்தத்தை ஜெயிக்கும் இரகசியம்

**ஆண்டவருடைய இரண்டாம் வருகை மிகச் சமீபம் ஆக ஆக, சாத்தானுடைய சதி திட்டங்களும் இன்னும் அதிகப் பொல்லாப்பானதும் சாதுரியமானதாகவும் மாறி வருகிறது. நாம் இப்போது எபேசியர் 6:14-17ன் அடிப்படையில் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தின் ஆவிக்குரிய அர்த்தங்களை பார்ப்போம்.**

## சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும் (எபேசியர் 6:14)

இங்கே, 'அரை' என்பது சரீரம் முழுவதையும் தாங்கக்கூடிய மிக முக்கியமான முதன்மை பங்கு வகிக்கிறது. நாம் நம்முடைய அரையை கச்சையால் கட்டும்போது, அந்த கச்சை கீழ் தண்டுவடத்தோடுகூட மைய தசைகளை தாங்கி அவைகள் அதன் நிலையில் இருப்பதற்கு மிக வலிமையான உறுதியை தருகிறது. கச்சை கட்டியிருக்கும்போது வலுவான வேலை செய்கையில் நிலையான தன்மையை நாம் உணரமுடியும். ஆகவே சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையிலே கட்டினவர்களாயும் என்பது நாம் சத்தியமாகிய இயேசுகிறிஸ்துவில் உறுதியாய் நிற்க வேண்டும் என்பதை அர்த்தப்படுத்துகிறது.

நாம் வார்த்தையில் உறுதியாய் நிற்கும்போது, நாம் எதிராளியான சாத்தானுடைய எந்த ஒரு சதிதிட்டத்திலும் அடித்து செல்லாதபடிக்கு ஆவிக்குரிய வல்லமையுள்ளவர்களாய் இருப்போம்.

மார்க்கவசம் என்பது சரீரத்தின் மேல் முன்பகுதியை மூடுகிற ஒரு வர்க்கம். அது இல்லாவிட்டால் போர்ச்சேவகன் மரணத்துக்கேதுவாக காயப்பட்டுவிடுவான். தேவன் நாம் ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயிப்பதற்கு 'நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரிக்கும்'படிக்கு நமக்குச் சொல்கிறார். நாம் நீதிமான்களாவதற்கு தேவனுடைய வார்த்தையை பற்றின அறிவு இருந்தால் மாத்திரம் போதாது. இருதயத்தில் வார்த்தையை விசுவாசித்து செயலில் கீழ்ப்படியும்போது மட்டுமே நாம் நீதியை அடைய முடியும் (ரோமர் 10:10). ஆகவேதான், நாம் தீமைகளையும் பாவங்களையும் களைந்துப்போட்டு நம்மை சத்தியத்தால் நிறைக்கும்போது மட்டுமே சாத்தானிடமிருந்து நம்மை தற்காத்து தைரியமாக இருளை விரட்டியடிக்க முடியும்.

## சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களில் தொடுத்தவர்களாயும் (எபேசியர் 6:15)



நாம் நமது பழைய சுயத்தை அதன் தீமையான பழக்க வழக்கங்களோடு ஓரம் ஒதுக்கிவைத்து தேவனை பிரதிபலிக்கிற புதிய மனுஷனை தரித்துக்கொள்ளும்போது மட்டுமே, நாம் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை நாம் நமது கால்களில் தொடுத்து பாதங்களை மூட முடியும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செயல்படும்போதுதான், நாம் மகிழ்ச்சி, சந்தோஷம், ஸ்தோத்திரம் மற்றும் சமாதானத்தினால் நிரப்பப்படுவோம்.

மாறாக, நாம் தேவனுடைய வார்த்தையை கற்றபோதிலும்கூட நாம் தேவனுடைய வார்த்தையிலே வாழ்வை நடத்த கஷ்டகாலம் கொண்டு கலக்கத்தை உணர்வோம். நாம் ஊக்கமாக ஜெபிக்கும்போது, பரிசுத்த ஆவியின் நிறைவையும் வெளிப்பாட்டையும் பெறுவோம். அதனால் நாம் வார்த்தையின்படி வாழ்வோம். அது நம்மை எப்போதும் சந்தோஷமாகவும், இடைவிடாமல் ஜெபிக்கவும், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யவும் நம்மை செயல்படுத்துகிறது (1தெச. 5:16–18).

நாம் அன்பின் தேவனால் புதிதாக்கப்பட்டு சமாதானத்திலும் சந்தோஷத்திலும் வாழும்போது நம்முடைய சுவிசேஷத்தின் மூலமாக, அநேக ஜனங்கள் கவனித்து மரண பாதையிலிருந்து ஜீவ பாதைக்குள்ளாக நுழைவார்கள்.

## பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்தரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள் (எபேசியர் 6:16)

ஒரு போர்ச்சேவகன் எவ்வளவு தைரியசாலியாக இருந்தாலும்கூட, எவ்வளவு நன்றாக ஆயுத வர்க்கத்தை தரித்திருந்தாலும்கூட, அவனிடத்தில் கேடயம் இல்லையென்றால், அவன் உயிருக்கு மிக எளிதாக ஆபத்து நேரிடலாம்.

ஒருவன் அக்கினியாஸ்தரத்தால் எய்யப்பட்டால், அவனுக்கு பயங்கரமான காயங்கள் ஏற்படும். ஆனால் நாமோ சாத்தான் நம்மை அக்கினி பரீட்சைகளால் சோதிக்கும்போது, விசுவாசமென்னும் கேடயத்தால் சாத்தான் எய்யும் எல்லா அக்கினியாஸ்தரங்களையும் அவித்துப் போட்டு பாதுகாக்கப்பட முடியும்.

விசுவாசத்தால் நாம் சர்வ வல்லமையுள்ள தேவனைப் பிரியப்படுத்தும்போது, வியாதிகள் வறுமைகள் உட்பட அனைத்து பிரச்சனைகளும் தீர்க்கப்படும். இருளின் அதிகாரங்கள் விரட்டியடிக்கப்படும்.

## இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் (எபேசியர் 6:17)

ஒருவர் யுத்தக்களத்தில் உலோக தலைச்சீராவை அணியாவிட்டால், அது மரணத்தை தனக்குத்தானே வருவித்துக் கொள்வதாகும். ஆவிக்குரிய ரீதியில், இரட்சணியமென்னும் தலைச்சீராவே மிக முக்கியமானது.

பிலிப்பியர் 2:12 சொல்கிறது, "ஆதலால், எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்." இரட்சிப்பு என்பது கிறிஸ்துவில் விசுவாசத்தை அறிக்கையிடும் எவருக்கென்றாலும் கொடுக்கப்படாது. நாம் பரிபூரண இரட்சிப்பை அடையும்வரையில், நாம் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்மை காத்து சத்தியத்தில் தரித்திருக்க வேண்டும்.

இரட்சிப்புக்காக ஒருவர் மகிழ்ச்சியினாலும் நன்றியினாலும் நிறைந்திருப்பாரெனில் அவருடைய முகம் புன்னகையோடு பிரகாசமாக இருக்க வேண்டும். அவரது உதடுகள் துதிகளால் அசைய வேண்டும், அவரது கண்கள் மகிழ்ச்சியால் பிரகாசிக்க வேண்டும். அவரது செவிகள் தேவனுடைய வார்த்தையை கேட்க வாஞ்சிக்கும். தேவனுடைய ராஜ்ஜியத்திற்கான வேலையை ஆண்டவர்பேரில் அன்போடும் உயிரோடும் செய்வார்.

இரட்சணியமென்னும் தலைச்சீராவை நாம் அணிந்தால், பரீட்சைகள் நமக்கு வந்தாலும்கூட நாம் அவைகளை ஆவிக்குரிய யுத்தக்களத்தில் மேற்கொண்டு அதனால் தேவனை நாம் மாபெரிதாய் மகிமைப்படுத்துவோம்.

மார்க்கவசம், தலைச்சீரா, கேடயம் அனைத்தும் தற்காப்பு ஆயுதவர்க்கம். ஆனால் பட்டயம் என்பது எதிரியை தாக்கக்கூடிய முதன்மையான ஆயுதம். அது இல்லாமல் நாம் ஜெயிக்க முடியாது. ஆவிக்குரிய யுத்தகளத்திலும்கூட, சாத்தானை தோற்கடிப்பதற்கு நாம் இந்த ஆவியின் பட்டயத்தை தரித்துக்கொள்ள வேண்டும். ஆவியின் பட்டயம் என்பது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது.

எந்தளவு தேவனுடைய வார்த்தையால் நாம் நம்மை தரிப்பித்துக்கொள்கிறோமோ அந்தளவு மாபெரிதான பெலனும் அதிகாரமும் இறங்கிவரும். நாம் இருளின் வல்லமைகளை தோற்கடிக்கலாம்.

கடைசியாக, தேவனுடைய வார்த்தையால் நம்மை தரித்துக்கொள்வது என்பது நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்வதற்கு முன்னால் நாம் செய்கிற ஆயத்தத்தைப்போல உள்ளது. ஊக்கமான ஜெபம் என்பது சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்கிற செயலைப்போல உள்ளது. நாம் தேவனுடைய வல்லமையால் எண்ணற்ற ஆத்துமாக்களை வழிநடத்துவதற்கு ஜெபிக்கவும், தேவனுடைய வார்த்தையால் நம்மைத் தரித்துக்கொள்ளவும் வேண்டும்.



# “தேவனுடைய வல்லமையால் என் குடும்பம் ‘ஒன்றிணைந்தது’”

கண்காணி செங்தே பார்க், வயது 60, மிர்யாங் மான்மின் சபை

என் புத்த குடும்பத்தில் ஒரே மகனாக நான் இருந்ததால் மூன்றாம் வயதிலிருந்து சுயநலத்தோடு வளர்ந்தேன். 1987ல், என் திருமணத்திற்கு பிறகு, நான் என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் கஷ்டத்தை கொடுத்தேன். ஏனென்றால், அவர்களுடைய கருத்துகளை கேட்காமல் கோபத்தில் கத்திவிடுவேன். என்னுடைய பாட்டி, என் பெற்றோர்கள் மற்றும் எனக்கும் பணிவிடை செய்ததால் என் மனைவி மனஅழுத்தத்தாலும் மற்ற அநேக வியாதிகளாலும் அவதிப்பட்டாள். அவள் விவகாரத்து செய்யக்கூட நினைத்தாள்.

எப்படியிருந்தாலும், 1993ம் ஆண்டு அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஒரு விசேஷித்த எழுப்புதல் கூட்டத்தில் கொடுத்த செய்திகள் அடங்கிய ஒலிநாடாவின் மூலமாக என் குடும்பத்தில் ஒரு பெரிய மாற்றம் வந்தது. என் மனைவி செய்திக்குப் பிறகு அவருடைய ஜெபத்தைப் பெற்றபொழுது, அவள் பரிசுத்த ஆவியானவரின் அக்கினியை பெற்றுக்கொண்டாள்; அவளுடைய அநேக வியாதிகளிலிருந்து சுகமடைந்தாள். ஒரு சந்தோஷமான முகத்தோடு அவள் சபைக்குப் போவதை நான் பார்த்தபொழுது நானும் அவளைப் பின்தொடர்ந்து சபைக்குச் சென்றேன். அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் என் வாழ்க்கைக்கான உண்மையான அர்த்தத்தை எனக்குப் போதித்தன; என் இருதயத்தை ஆழமாய் அசைத்தன.

**என்னுடைய பெற்றோர்கள் தங்களது வியாதிகளிலிருந்து சுகமடைந்தனர்**

நான் ஞாயிற்றுக்கிழமைக்காக காத்திருந்தேன். ஆரம்பத்தில் என் பெற்றோர்கள் எங்களுக்கு உபத்திரவம் கொடுத்தாலும், தன்னுடைய கடமைகளை ஒழுங்காய் நிறைவேற்றி அவர்களுக்கு முழு மனதோடு பணிவிடை செய்த என் மனைவியால் அவர்கள் தொடப்பட்டனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்களும் சபையில் வந்து பதிவு செய்தனர். என்னுடைய அப்பா அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் மூட்டு வாதத்திலிருந்து சுகமடைந்தார். என் அம்மாவின் வளைந்த முதுகும், கீழே விழுந்ததால் மாற்றியமைந்திருந்த எலும்புகளும் வல்லமையால் நேராக்கப்பட்டது.

2007 கோடைகாலத்தில், அநேக தீங்குவிளைவிக்கும் பூச்சிகள் இருந்தன. எனவே வேறு வழியின்றி நான் பூச்சி மருந்தை விவசாயத்திற்கு அடிக்கவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் பின்பு திரளான தட்டமாம்பூச்சி கூட்டம் என் வயலில் தோன்றியது. தேவன் அவைகளை என் நெல் விளைவித்த வயலில் மாத்திரம் அனுப்பினார், பூச்சிகளை அவை பிடித்து தின்றதால் நான் பூச்சி மருந்தை அடிக்க தேவையில்லை. அதிகமான அறுவடையையும் நான் பெற்றுக்கொண்டேன். அதுமுதற்கொண்டு, பத்து ஆண்டுகளாக பூச்சிமருந்து அடிக்காமல் நான் அரிசியை அறுவடை செய்துகொண்டு வருகிறேன். நான் மிகவும் நன்றியோடு இருக்கிறேன்.

சபையில் நான் பதிவுசெய்த பிறகு, எனக்கு தேவன் தந்த அநேக கடமைகள் கொடுக்கப்பட்டன; நான் உண்மையாக வேலை செய்ய முயற்சித்தேன். சபையில் பொறுப்புகளை பெற்றும்கூட என் விருப்பப்படி காரியங்கள் நடக்காதபொழுது நான் கோபமடைந்தேன். அது ஒரு அவமானமாகும். என் இரண்டு மகன்களும் என்னைவிட்டு தூரம்போயினர். தேவன் நான் பரிசுத்தமடைய வேண்டும் என்று விரும்பியபோதும் நான் அதைப் புறக்கணித்தேன். ஆகவே தேவனுக்கு முன்பதாக முற்றிலுமாக என்னை தாழ்த்த துவங்கினேன். நான் தானியேல் ஜெபக்கூடுகையில் ஜெபித்தேன், அதன்பிறகு விசேஷித்த ஜெபத்தையும் ஏறெடுத்தேன்.

நான் சுயநலமாக இருந்ததை குறித்து மனந்திரும்பினேன். என் இறுமாப்பை அகற்றவும் பிறரை மதிக்கவும் முயற்சித்தேன். இப்படி முயற்சிக்க ஆரம்பித்த பிறகு, நீண்ட ஆண்டுகளாக என்னை கஷ்டப்படுத்திய கடுங்கோபமானது என்னைவிட்டு சிறிது சிறிதாக அகன்றுப்போனது. நான் என் பிள்ளைகள் சொல்வதை கேட்டு, என் மனைவிக்கும் வீட்டு வேலைகளில் உதவி செய்தேன். சில சமயங்களில் என்னைப் பற்றி நானே ஆச்சரியமடைந்தேன். பிறகு, என் குடும்பம் இதமான நிலையை உணர்ந்தது, பிறரால் புகழப்படுகிறவனாக நான் மாறினேன்.

ஜனவரி 16,2017ல் என் மனைவி இருமிக் கொண்டே இருந்தாள், ஒரு நீண்ட கடுமையான காய்ச்சலும் இருந்தது. அவளுடைய எக்ஸ்ரேவும் CT ஸ்கேனும் அவளுக்கு கடைசிநிலை நுரையீரல் புற்றுநோய் இருப்பதாக காண்பித்தது. 5 செ.மீ அளவுடைய ஒரு வீக்கம் இருந்தது, அது பார்வைக்கு கட்டியை போல இருந்ததால், மருத்துவர் ஒரு மிகப் பெரிய மருத்துவமனையிலுள்ள மருத்துவரிடம் ஆலோசிக்குமாறு கூறினார். ஜனவரி 18 அன்று, பூசான் பல்கலைக்கழக மருத்துவமனையில் கடைசிநிலை புற்றுநோய் இருப்பதாக அவளுக்குச் சொல்லப்பட்டது. மருத்துவர்கள் ஒரு பயாப்ஸி சிகிச்சை செய்யும்படி பரிந்துரைத்தனர். அவள் மருத்துவமனை வார்டில் இருந்தபொழுது ஸ்மார்ட்போன் வழியாக தானியேல் ஜெபக்கூடுகையில் பங்குப்பெற்றாள்; தன் குறைகளை குறித்து மனந்திரும்பினாள். அவள் தானியங்கி முறையில் பதிவுசெய்யப்பட்ட அறிவர். லீ அவர்களின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றுக் கொண்டாள்.

ஜனவரி 25 அன்று, பயாப்ஸி சிகிச்சை வெறும் வீக்கம் இருப்பதாகக் காண்பித்தது. பிப்ரவரி 2 அன்று, மறு பரிசோதனையும் கட்டியில்லை வீக்கம் என காண்பித்தது. மார்ச் 2 அன்று, பரிசோதனையின் முடிவு ஒரேமாதிரியாகவே இருந்தது. எங்களுக்காக ஜெபித்த மேய்ப்பரின் அன்பிற்காக நானும் அவளும் மிகுந்த நன்றியோடு இருந்தோம்.

எதைக் குறித்தும் கலக்கமடையாமல் அவள் தேவனை மாத்திரம் சார்ந்துகொண்டதை பார்த்தபொழுது, இடைவிடாத தேவனுடைய வல்லமையையுடைய நான் போகிற சபையை குறித்து எங்கள் குடும்பம் மிகுந்த நன்றியை உணர்ந்தது. என் குடும்பத்தை ஒரு சந்தோஷமான குடும்பமாக புதிதாக்கிய தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

# “நான் முடக்குவாதத்திலிருந்து சுகமானேன், கேட்கும் திறனையும் புதுப்பித்துக் கொண்டேன்”



சகோதரி க்ளாய்டியா பெர்னியாக், வயது 55, ப்ரான்ஸ்

எனக்கு முடக்குவாதம் இருந்ததால், பத்து வயதிலிருந்து மருந்துகளை எடுத்துக் கொண்டு வருகிறேன். என்னுடைய 30வது வயதில் காது எலும்பு கடினமடைந்ததால் என் இரண்டு காதுகளிலும் அறுவைச் சிகிச்சை செய்தேன். ஆனால் அதன்பிறகு என்னுடைய இடது காதில் பிரச்சனை மீண்டும் வந்தது. கேட்பதில் எனக்கு பிரச்சனை உருவானது. 1999ம் ஆண்டு என் முதல் மகனைப் பெற்றெடுத்த பிறகு எனக்கு வயிற்று கோளாறு உண்டானது. வலியினாலும், நோயினாலும் நான் சிக்கிக்கொண்டேன்.

என் நிலைமைகளை மோசமாக்கும் விதத்தில் என் முதல் மகன் போதை வஸ்துக்கு அடிமையானான். நான் கலங்கிப் போனவளாய் அவனோடு ஒவ்வொரு நாளும் வாக்குவாதம் செய்தேன். வாழ்க்கையின் பாரங்களினால் அழுத்தப்பட்டு வேதனையில் நான் வாழ்ந்துகொண்டிருந்தபொழுது, 2014ல் எனக்கு நன்கு அறிமுகமான ஜெனட்–ஐ சந்தித்தேன். மான்மின் தலைமை சபையின் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் செய்திகளுக்கு கீழ்ப்படிந்ததால், அதன்மூலமாக தேவனுடைய அன்பை அவள் உணர்ந்து தன் வாழ்க்கையின் அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, வியாதியிலிருந்தும் சுகமடைந்ததால் அவள் சந்தோஷமாக இருப்பதாகச் சொன்னாள்.

அவருடைய புத்தகங்களான சிலுவையின் செய்தி, பரலோகம், நரகம் மற்றும் தேவன் பரிகாரி போன்றவற்றை எனக்கு கொடுத்தாள். நான் மிகுந்த கிருபைகளைப் பெற்றுக்கொண்டேன். இருபது ஆண்டுகளுக்கு முன்பதாகவே நான் ஞானஸ்நானம் எடுத்திருந்தேன்; கிறிஸ்தவளாக மாறியிருந்தேன்; இருந்தாலும் அப்படிப்பட்ட பிரசங்கங்களை இதற்கு முன்பு வேறெங்கும் நான் கேள்விப்பட்டதே இல்லை.

நான் சபையின் ஆராதனைகள் மற்றும் ஜெபக்கூட்டங்களில் GCN டிவி வாயிலாக பங்குப்பெற்றேன். 2015 மே மாதத்தில், இறுதியாக நான் மான்மின் அங்கத்தினராக பதிவுசெய்து கொண்டேன்.

2016 ஜூன் மாதத்தில், மான்மின் உலகளாவிய கிளைசபைகளின் வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ அவர்கள் பிரான்ஸ் நாட்டிற்கு வந்து, கைக்குட்டை சுகமளிக்கும் (அப். 19:11–12) கூட்டத்தை நடத்தினார்கள். அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்த கைக்குட்டையின்மூலமாக நான் ஜெபத்தைப் பெற்ற பிறகு, நான் 17 ஆண்டுகளாக அவதிப்பட்டு வந்த வயிற்றுக் கோளாறிலிருந்தும், 44 ஆண்டுகால முடக்குவாதத்திலிருந்தும் சுகமடைந்தேன்.

ஆகஸ்டு மாதத்தில் நான் தென்கொரியாவிற்குச் சென்று போதை வஸ்துக்கு அடிமையாக்கப்பட்டதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த என் முதல் மகனுக்காக தலைமை போதகரின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். 2016 மான்மின் கோடை முகாமின் முதல் நாளில் அவருடைய ஜெபத்தை நான் விசுவாசத்தோடு பெற்றுக்கொண்ட பிறகு, என் மகன் நல்ல முன்னேற்றம் கண்டு, சமாதானமானவனாய் மாறினான். என்னுடைய இடது காதில் கேட்கும் திறனை புதுப்பித்துக் கொண்டேன். இப்பொழுது நன்றாய் கேட்க முடிகிறது. அல்லேலூயா!

GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN
World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com